# தாய்ப்பாலூட்டலும் குழந்தைப் பராமரிப்பும்

*குழந்தைப் பராமரிப்புச் சேவை வழங்குவோர்க்கு முக்கியமான தகவல்கள்*

### தனது குழந்தை பராமரிப்பு நிலையத்திற்குச் செல்ல ஆரம்பித்தவுடன் தாய்ப் பாலூட்ட விரும்பும் தாய்க்கு உங்களுடைய ஆதரவையும் உற்சாகத்தையும் அளித்தல் மிகப் பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தும்.

தன்னுடைய குழந்தைக்கு தாய்ப் பால் ஊட்டும் முயற்சிக்கு நீங்கள் ஆதரவு வழங்குகிறீர்கள் என ஒரு தாய்க்குத் தெரிந்தால், நீங்கள் அவர் தனது குழந்தைக்குப் தாய்ப் பால் ஊட்டுவதற்கு உதவி செய்வீர்கள்

குழந்தை பராமரிப்புச் சேவை வழங்குநர் என்ற முறையில் தாய்ப் பாலூட்டும் தாய்மார்களுக்கு எதிராக வேறுபாடு காட்டக் கூடாது. பாரபட்சச் சட்டம் 1991ன் கீழ் தாய்ப் பால் ஊட்டல் உரிமை பாதுகாக்கப்பட்டுள்ளது.நீண்ட நாள் பராமரிப்பு, அவ்வப்போது செய்கின்ற பராமரிப்பு, குடும்ப நாள் பராமரிப்பு அல்லது வீட்டுப் பராமரிப்பு உட்பட குழந்தை பராமரிப்பு வழங்கும் ஒவ்வொருவரும் இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். இந்தச்சேவை லாப நோக்கில்லாதது அல்லது வணிக நோக்கத்திற்கானது என்பது பரவாயில்லை.

### மேலும் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால்

நீங்கள் ஒஸ்திரேலிய தாய்ப் பால் ஊட்டல் சங்கத்தினுடைய கீழ்க்காணும் துண்டு வெளியீட்டை அதன் இணையத்திலிருந்து நகல் எடுத்துக் கொள்ளலாம் www.breastfeeding.asn.au. என்னும் இணையத்திலிருந்து தாய்ப்பால் ஊட்டப்படும் குழந்தைக்கான ஒரு பராமரிப்பாளருக்குரிய துண்டு வெளியீட்டைப் பெற முடியும்

குழந்தைகளுக்காக வெளியேற்றப்பட்ட தாய்ப் பாலை எப்படிச் சேமித்து வைப்பது, பயன்படுத்துவது மற்றும் ஊட்டுவது என்பது பற்றி இந்தத் துண்டுப் பிரசுரம் புரியுமாறு செய்கின்றது. ஏதாவது வினாக்களைக் கொண்டுள்ள தாய்மார்களுக்கு அல்லது பராமரிப்பாளர்களுக்கு உதவி செய்வதற்காக ஒஸ்திரேலிய தாய்ப்பால் ஊட்டும் சங்கத்திடம் தாய்ப் பால் ஊட்டுதல் தொடர்பாக அறிவுரை கூறுபவர்கள் உள்ளனர். அத்துடன் அதன் வலைத்தளத்தில் பல்வேறு தலைப்புக்களை உள்ளடக்கியிருக்கின்ற தாய்ப் பால் ஊட்டல் பற்றிய தகவல்கள் உள்ளன.



### கீழே குறிப்பிடப் பட்டுள்ளவற்றைச் செய்தல் சட்டத்திற்கு எதிரானதாகும்

- குழந்தை பராமரிப்பு இடத்திற்கான ஒரு விண்ணப்பத்திற்கு மறுப்புத் தெரிவிப்பது அல்லது குழந்தைக்குத் தாய்ப்பால் ஊட்டப்படுவதால் ஒரு இடம் வழங்காமல் இருப்பது
- பராமரிப்பில் குழந்தை ஆரம்பிக்கும் போது அதன் தாய் தொடர்ந்தும் பால் ஊட்டுவதற்கு ஊக்கம் அளிக்காமை
- உங்களுடைய வளாகத்தில் ஒரு பெண் தனது குழந்தைக்கு பால் ஊட்டுவதற்கு அல்லது பால் வெளியேற்றுவதற்கு அனுமதி அளிக்காமை
- தாயிடமிருந்து வெளியேற்றப்பட்ட பாலை குழந்தைக்கு ஊட்டுவதற்கு மறுப்பது அல்லது
- உங்கள் கவனிப்பில் இருக்கும் போது ஒரு குழந்தைக்குத் தொடர்ந்தும் தாய்ப் பாலை பெற்றோர் ஊட்டுவதற்கு கடினமாக்கும் எந்தச் செயலும்

### உங்களுடைய சேவையை நட்புறவு கொண்ட தாய்ப் பால் ஊட்டலாக்குவதற்கான சில அறிவுரைகள்

- பெற்றோர்களுடன் முதல் முறை பேசும் போது நீங்கள் தாய்ப்பாலூட்டுவதற்கு ஆதரவு வழங்குகின்றீர்கள் என அவர்களுக்குச் சொல்லுங்கள்
- உங்கள் நிலையத்தில், அல்லது வீட்டில் தாய்மார் பாலூட்டுவதற்கு அல்லது தாய்ப்பாலை வெளியேற்றுவதற்கு வசதியான இடத்தை வைத்திருங்கள்
- குழந்தையின் தாயார் தனது குழந்தைக்காகத் தாய்ப் பால் விட்டுச் செல்வது பற்றி ஆக்கபூர்வமாக இருங்கள்

### உங்களுடைய குழந்தைப் பராமரிப்புச் சேவையை நட்பு முறையில் நடத்துவது பற்றிய மேலதிகத் தகவல்களுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ளவற்றுடன் தொடர்பு கொள்ளுங்கள்

Australian Breastfeeding Association

(ஒஸ்திரேலியத் தாய்ப்பால் ஊட்டல் சங்கம்)

உதவித் தொலைபேசி எண் : 1800 686 268

உரை பெயர்ப்பாளர் சேவை : 13 14 50

மின்னஞ்சல் : info@breastfeeding.asn.au

இணையம் : www.breastfeeding.asn.au

சமுதாய மொழிகளில் தாய்ப்பாலூட்டுதல் பற்றிய தகவல்களும் பல வகைப்பட்ட ஏனைய தாய்ப்பால் ஊட்டல் வளங்களும் தகவல்களும் உள்ளன (02) 6162 2716 எனும் தொலைபேசியை அழைத்தால் அவை உங்களுக்குக் கிடைக்கும்

HUMAN RIGHTS & DISCRIMINATION COMMISSIONER
ACT Human Rights Commission

Australian Breastfeeding Association

# தாய்ப் பாலுட்டலும் குழந்தைப் பராமரிப்பும்

## *பெற்றோர்களுக்கான முக்கிய தகவல்கள்*

### குழந்தை பராமரிப்புச் சேவையைப் பயன்படுத்தும் நேரம் உட்பட உங்களுக்கும், உங்களுடைய குழந்தைக்கும் பொருந்தும் எந்த இடத்திலாவது நீங்கள் தாய்ப்பாலூட்டலாம்

உங்கள் குழந்தைகள் பராமரிப்புச் சேவையில் இருக்கும் போது நீங்கள் உங்கள் குழந்தைக்குப் பாலூட்டலாம் அல்லது அகற்றப்பட்ட தாய்ப்பாலைக் கொடுக்கலாம்.

ஒரு குழந்தைப் பராமரிப்புச் சேவை வழங்குநர், நீங்கள் தாய்ப்பால் கொடுக்கிறீர்கள் என்ற காரணத்திற்காகப் பாரபட்சம் காட்டுவது சட்டத்திற்கு எதிராக உள்ளது

### உங்களுக்குப் பாரபட்சம் காட்டப்பட்டிருக்கலாம் என நீங்கள் நினைத்தால் அல்லது தாய்ப்பாலூட்டல் குறித்து அதிக தகவல்கள் பெற விரும்பினால் கீழ்க் காண்பவற்றுடன் தொடர்பு கொள்ளுங்கள்

ACT Human Rights Commission

(ACT மனித உரிமைகள் குழு)

தொலைபேசி : (02) 6205 2222

உரை பெயர்ப்பாளர் சேவை : 13 14 50

மின்னஞ்சல் : human. rights@act.gov.au

இணையம் : www.hrc.act.gov.au



**உங்களுடைய குழந்தைப் பேணுதல் வழங்குநர் :**

- உங்கள் குழந்தைக்குத் தாய்பால் கொடுக்கப்படுகின்றது என்ற காரணத்திற்காக ஒரு குழந்தைப் பராமரிப்புச் சேவை இடத்திற்கான விண்ணப்பத்தை மறுக்க முடியாது அல்லது இடத்தை வழங்காமல் இருக்க முடியாது
- உங்கள் குழந்தை குழந்தைப் பராமரிப்புக்குச் செல்ல ஆரம்பிக்கும் போது தாய்ப்பாலூட்டலை நிறுத்தும்படி உங்களிடம் கேட்க முடியாது
- வளாகத்தில் தாய்ப் பாலூட்டவோ அல்லது தாய்ப்பாலை வெளியேற்றவோ அனுமதிக்க வேண்டும்
- உங்கள் குழந்தைக்கு வெளியேற்றப்பட்ட தாய்ப்பாலைக் கொடுப்பதற்கு மறுப்பு தெரிவிக்க முடியாது, அல்லது
- குழந்தைகள் அவர்களுடைய பராமரிப்பில் இருக்கும் போது நீங்கள் தாய்ப்பாலை ஊட்டுவதற்கு அல்லது தாய்ப்பாலைக் கொடுப்பதற்கு உங்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும்
- 1991 Act பாரபட்ச சட்டத்தின் கீழ் உங்கள் தாய்ப்பாலூட்டும் உரிமை பாதுகாக்கப் பட்டுள்ளது. நீண்ட நாள் பராமரிப்பு, அவ்வப்போது பராமரிப்பு, குடும்பப் பகல் நேரப் பராமரிப்பு அல்லது வீட்டில் பராமரித்தல் உட்பட ஒவ்வொரு குழந்தை பேணும் சேவையும் இந்தச் சட்டத்திற்கு பணிந்து நடக்க வேண்டும் இந்தச் சேவை லாப நோக்கம் இல்லாமலிருந்தாலும் அல்லது வர்த்தக ரீதியானதாக யிருந்தாலும் பரவாயில்லை

உங்களுடைய குழந்தை பராமரிப்பைத் துவங்கும் போது, உங்கள் குழந்தைக்குத் தாய்ப்பால்லூட்டுவதற்கு உதவி செய்வதற்காக உங்கள் குழந்தை பராமரிப்புச் சேவையுடன் ஏற்பாடுகளைச் செய்யக்கூடியதாக இருக்க வேண்டும்

தாய்ப்பால் ஊட்டப்படும் குழந்தைக்கு ஒரு பராமரிப்பாளர் வழிகாட்டி என்னும் ஒஸ்திரேலியத் தாய்ப்பாலூட்டும் சங்கத்தின் துண்டுப் பிரசுரத்தை ABA வலைத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். இந்தத் துண்டு வெளியீட்டில் குழந்தைகளுக்கு எப்படி வெளியேற்றப்பட்ட தாய்ப்பாலைக் கொடுப்து மற்றும் எப்படி அதனைச் சேமித்து வைப்பது,கையாள்வது என்ற உங்கள் குழந்தைப் பராமரிப்புச் சேவைக்கான தகவல்கள் உள்ளன. ABA இடம்,தாய்மார்களுடைய மற்றும் குழந்தைப் பராமரிப்புச் சேவையாளர்களுடைய வினாக்களுக்கும் பதில் அளிக்கக் கூடிய தாய்ப்பாலூட்டல் சம்பந்தமாக அறிவுரை கூறுபவர்கள் உள்ளனர்

### உங்களுடைய குழந்தைப் பராமரிப்புச்சேவையின் தாய்ப்பாலூட்டலை நட்பானதாக்குவதற்குரிய மேலதிகத் தகவல்களுக்குப் பின்வருவனவற்றுடன் தொடர்பு கொள்ளுங்கள்

Australian Breastfeeding Association

(ஒஸ்திரேலியத் தாய்ப்பாலூட்டல் சங்கம்)

உதவித் தொலைபேசி எண் : 1800 686 268

உரை பெயர்ப்பாளர் சேவை : 13 14 50

மின்னஞ்சல் : info@breastfeeding.asn.au

இணையம் : www.breastfeeding.asn.au

(02) 6162 2716 என்னும் தொலைபேசி எண்ணை அழைப்பதன் மூலம் சமூக மொழிகளில் தாய்ப்பாலூட்டல் பற்றிய தகவல் இதழ்களும் பலவகைப்பட்ட தாய்ப்பாலூட்டல் பற்றிய வளங்களும் தகவல்களும் கிடைக்கும்

HUMAN RIGHTS & DISCRIMINATION COMMISSIONER
ACT Human Rights Commission

Australian Breastfeeding Association